# தமிழ் இலக்கியங்களில் பல்துறைப் பதிவுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## ஆய்வுக்கட்டுரைகள்

கற்றனைத் தூறும் அறிவு



**தமிழ்த்துறை** (சுயநிதிப்பிரிவு)

**நாடார் மஹாஜன சங்கம்**

**ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி** (தன்னாட்சி)

(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினரால் 'A' தரச்சான்று ; ISO 9001:2008 சான்றிதழ் பெற்ற கல்லூரி

நாகமலை, மதுரை – 625 019.

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் பல்துறைப் பதிவுகள் |
| பொருள் | : | ஆய்வுக்கட்டுரைகள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2016 |
| பக்கங்கள் | : | XX + 734 |
| நூல் அளவு | : | டெம்மி (1 x 8) |
| தாள் | : | 80 GSM |
| விலை | : | 480 |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் மா. பெரியசாமி<br>முனைவர் இரா. அனிதா<br>முனைவர் க. அல்லிராஜன்<br>முனைவர் இரா. கமலாதேவி<br>பேரா. அ. ஸ்ரீஜனனி<br>முனைவர் மு. முத்துவைரம்<br>முனைவர் ஞா. செல்வராக்கு<br>பேரா. நா. இரஞ்சித்குமார்<br>பேரா. கு. கனகமணி<br>பேரா. தி. கௌரி<br>பேரா. ஞா. அந்தோணி சுரேஷ் |
| வெளியீடு | : | நாமகள் பதிப்பகம்<br>283/1,ஈஸ்வரன் தெரு,<br>பகலவன் நகர்,<br>அனுப்பானடி மெயின்ரோடு,<br>மதுரை - 625 009 |
| கணினி வடிவமைப்பு | : | மு. மாடசாமி<br>நாகமலை, மதுரை–625 019. |

ISBN:978-81-929395-0-6

59. **குறுந்தொகையில் எண்வகை மெய்ப்பாடு** ............................ 323
மா.மாரீஸ்வரி

60. **பெண்பாற் புலவர்களின் மரபு மீறியக் கருத்துக்கள்** ........ 329
வ.மீனாட்சி

61. **நற்றிணையில் நற்றாயின் உளநிலை** ................................ 334
ஆ.மெர்சி ஆஞ்சலா

62. **சங்க இலக்கியங்களில் தொல்காப்பிய இலக்கண விதிகள்** ...................................................... 339
தி. மோகன்ராஜ்

63. **நெடுநல்வாடை - நுண்மாண் நோக்கு** ................................ 345
மு. முத்துமாறன்

64. **மென்மைக்குள் வன்மையின் வலுவான ஆற்றல்கள்** ......... 351
ச.முத்துப்பாண்டியம்மாள்

65. **தகவல் திரட்டப் பயன்படும் உத்திகள்** .................................. 356
சே.முத்துராஜ்

66. **ஞாயிறு போற்றுதும்! மொழிஞாயிறு போற்றுதும்!!** ........ 362
முனைவர் மு. முத்து வைரம்

67. **படைப்புலகில் - சிவகாமியின் இயங்கு வெளி** .................. 367
(ஆனந்தாயி நாவலை மையமிட்டு)
வே.நித்யப்பிரியா ........................................................................ 367

68. **பெரியாழ்வார் பாடல்களில் தொன்மம்** ................................ 372
ச.பாக்கியலட்சுமி

69. **சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமணமுறை**. 378
வி.பத்மஷீலா

70. **மானிடவியல் நோக்கில் மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும்** ................................................................ 382
மா.பழனிக்குமார்

71. **மனிதனின் ஒழுக்கம் உரைக்கும் ஆசாரக்கோவை** ............ 387
சு.பாண்டீஸ்வரி

72. **புறநானூற்றில் உடலியல் சார்ந்த மருத்துவ முறைகள்**... 392
இரா. பாண்டியராஜன்

73. **காளமேகப் புலவரின் இலக்கண ஆளுமை** ........................... 398
பாண்டிச்செல்வி

# நற்றிணையில் நற்றாயின் உளநிலை

**ஆ.மெர்சி ஆஞ்சலா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பாத்திமா கல்லூரி
மதுரை.

## முன்னுரை

தமிழர்களின் வாழ்வில் ஒப்பற்ற காலமாகச் சங்க காலம் விளங்குகிறது. தமிழர் பண்பாட்டினைக் கட்டிக்காக்கும் கருவூலமாகச் சங்க இலக்கியங்கள் அமைந்தன. இதில் மக்களையே மையப் பொருளாக வைத்துப் பாடப்பெற்ற பாடல்கள் உள்ளன. இதற்கு ஈடான கவிதைகளை உலகெங்கணும் காண இயலாது எனலாம். இதனை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பகுப்பர். எட்டுத் தொகையிலுள்ள நற்றிணைப் பாடல்களில் நற்றாயின் உளநிலையினை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியமும் உளவியலும்

மனிதனின் உள்ளார்ந்த எண்ணங்களை இலக்கிய மாந்தர்கள் வழியாகிப் படிப்போரிடம் கொண்டு செல்வதே படைப்பாசிரியரின் பணியாக அமைகிறது. எந்தெந்த சூழல்களில் அக உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர் என்ற கருத்தோட்டத்துடன் சிநதிப்பது ஆராய்ச்சியாளர்களின் கடமையாகும். நற்றிணையில் நற்றாயின் உணர்வலைகள் மகளின் பிரிவிற்குப் பின்னர் வெளிப்படுவதைக் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## நற்றிணையில் நற்றாய்

நற்றிணையில் தலைவன், தலைவி, தோழி கூற்றுப் பாடல்களே மிகுதி. எட்டுத்தொகை பாடல்களில் (நற்.66, 110, 143, 184, 271, 279, 293, 305) மட்டுமே நற்றாய் கூற்று அமைகிறது. எல்லாப் பாடல்களும் உடன்போக்குச் சென்ற தலைவியை எண்ணித் தாம் புலம்பித் தவிக்கும் பாடல்களாகவே உள்ளன. பருவ வயது வரை தன்னுடன் வாழ்ந்த மகள் விரும்பி பயன்படுத்திய பொருட்களைக் காணும் பொழுது தாயின் கவலை மேலும் அதிகரிக்கிறது.